பக்கங்கள் - 08
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 பங்குனி 25 வெள்ளிக்கிழமை (10.04.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 113



## மன்னாரில் கோர விபத்து
### சகோதரிகள் இருவர் ஸ்தலத்திலேயே உயிரிழப்பு



(மன்னார்)
மன்னார் - மதவாச்சி பிரதான வீதி, பரப்பாங்கண்டன் பகுதியில் நேற்று வியாழக்கிழமை மதியம் 2.30 மணியளவில் இடம் பெற்ற விபத்தில் இரண்டு பெண் சகோதரிகள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.
மன்னாரில் இருந்து சென்ற மோட்டார் சைக்கிளும், முருங்கன் பிரதான வீதியூடாக மன்னார் நோக்கி வந்த பிக்கப் 02

## மதிலுக்குள் அகப்பட்ட இளைஞனை
## காப்பாற்ற யாரும் இல்லாத நிலையில் உயிரிழப்பு
### முல்லைத்தீவு தேவிபுரத்தில் சம்பவம்



(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு, தேவிபுரம் பகுதியில் தனியார் பால் கொள்வனவு நிலையம் ஒன்றில் பணிபுரிந்த இளைஞன் ஒருவர் 02

### கொரோனா நோயாளர்களுடன் நெருங்கியவர்கள் மட்டுமல்லாது
# அடுத்த கட்டத்தில் உள்ளோரையும் இனம் கண்டு பரிசோதிக்க வேண்டும்
### மருத்துவ நிபுணர்கள் குழு ஜனாதிபதி கோட்டாவுக்கு ஆலோசனை

**(கொழும்பு)**
**"கொரோனா வைரஸ் தொற்றுடையவர்களுடன் நெருங்கிப் பழகிய குழுக்கள் தனிமைப் படுத்தப்பட்டு பரிசோதனைக்குட்படுத்தப்படும் முறைமை தற்போது கடைப்பிடிக்கப் படுகிறது. எனினும் அதற்கப்பாலும் இரு கட்டங்கள் முன்னோக்கி தொடர்புகளை கொண்டிருந்தவர்களை இனம் கண்டு பரிசோதிக்க வேண்டும்"**
**இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு மருத்துவ நிபுணர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.**

கொரோனா வைரஸ் நாட்டினுள் பரவுவதை உடனடியாக ஒழிப்பதற்கு தேவையான மருத்துவ நிபுணர்களின் கருத்துக்களை பெற்றுக் கொள்ளும் நோக்கில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் பல்வேறு துறைகளை சேர்ந்த மருத்துவ நிபுணர்களுக்கு மிடையிலான சந்திப்பொன்று நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம் பெற்றது. 02

### மீசாலை கிழக்கில்
## இளம் யுவதி சடலமாக மீட்பு

(சாவகச்சேரி)
தென்மராட்சி மீசாலை கிழக்கு பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து நேற்று வியாழக்கிழமை மாலை இளம் யுவதி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
இதில் மீசாலை கிழக்கைச் சேர்ந்த 21 வய 02

### மருந்தகங்கள்
## இன்றும் திறக்கப்படும்

(கொழும்பு)
நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து மருந்தகங்களையும் இன்று (வெள்ளிக் கிழமை) திறப்பதற்கு 02

## இன்றுடன் 20 நாள்

(யாழ்ப்பாணம்)
கொடிய கொரோனா வைரஸ் தொற்று காரணமாக நாட்டில் ஊரடங்குச் 02

## யாழ்ப்பாணம் உட்பட இடர் வலயங்கள் தொடர்ந்து முடக்கம்
### ஏனைய மாவட்டங்கள் 14ஆம் திகதி தற்காலிகமாக ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)
கொரோனா வைரஸ் தொற்று பரவல் தொடர்பில் இடர் வலயங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள கொழும்பு, கம்பஹா, களுத்துறை, 02

## வேட்பாளர்கள் மக்களுக்கு நேரடியாக உதவி வழங்க முடியாது
### தேர்தல் ஆணைக்குழு அறிவுறுத்தல்

(கொழும்பு)
கொரோனா வரைஸ் தொற்று (கோவிட் -19) பரம்பலைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கும் இந்தக் காலத்தில் மக்களுக்கான உதவித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அந்த உதவித் திட்டங்களில் பொதுத் தேர்தலுக்காக வேட்புமனுத் தாக்கல் செய்த எந்தவொரு 03

### கொரோனா வைரஸால்
## பூநகரி இளைஞன் லண்டனில் உயிரிழப்பு



(பூநகரி)
பூநகரியைச் சேர்ந்தவரும் லண்டனில் வசிப்பவருமான ஊடகவியலாளர் தில்லைநாதன் ஆனந்தவர்ணன், கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட 02

### அடுத்த இரண்டு வாரங்களில்
## கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதை தவிர்க்க முடியாது
### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)
அடுத்த இரண்டு வாரங்களில் நாட்டில் கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதை தவிர்க்க முடியாது என அரச மருத்துவ 02

### ஊரடங்குச் சட்டத்தை மீறி
## வேறு மாவட்டங்களுக்கு செல்வோர் தனிமைப்படுத்தப்படுவர்
### பிரதிப் பொலிஸ்மா அதிபர் எச்சரிக்கை

(கொழும்பு)
ஊரடங்கு சட்டத்தை மீறி ஒரு மாவட்டத்திலிருந்து மற்றுமொரு மாவட்டத்திற்கு செல்வோர் தனிமைப்படுத்தி கண்காணிக்கும் நிலையங் 02

## கொரோனா 190 ஆனது
### நேற்று ஐவர் குணமடைந்து வீடு திரும்பினர்

(கொழும்பு)
கொரோனா வைரஸ் (Covid-19) தொற்றால் மேலும் ஒருவர் நேற்று வியாழக் 03

### இலங்கையில் கொரோனா ஒழிப்புக்கு
## ஐரோப்பிய ஒன்றியம் ரூ.450 கோடி உதவி

(கொழும்பு)
கொரோனாவிற்கு எதிரான இலங்கையின் போராட்டத்திற்கு உதவும் வகையில் ஐரோப்பிய ஒன்றியம் 22 மில்லியன் யூரோ நிதியுதவியை 03

# இளம் யுவதி...

தான சோமசுந்தரம் லிந்துஜா என்ற யுவதியே இவ்வாறு சடலமாக அவரது வீட்டில் இருந்து மீட்கப்பட்டுள்ளார்.

மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

சடலம் பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-3,30)

# இன்றும் திறக்கப்...

அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன இதனைத் தெரிவித்துள்ளார்.

இன்று காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை மருந்தகங்களை திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்றைய தினமும் நாடளாவிய ரீதியில் மருந்தகங்களை திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

# மன்னாரில் கோர...

ரக வாகனமும் மோதியதில் மோட்டார் சைக்கிலில் பயணித்த குறித்த இரு பெண்களும் உயிரிழந்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

குறித்த இரு பெண்களும் உடன் பிறந்த சகோதரிகளான சந்தியோகு லிண்டா (வயது-40), மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலையில் கடமையாற்றுகின்றார்.

மற்றையவர் சந்தியோகு டெரன்சி (வயது-25) மன்னார் அஞ்சல் அலுவலகத்தில் கடமையாற்றி வருகின்றார்.

குறித்த இருவரும் கடமை முடிந்த நிலையில் மன்னாரில் இருந்து கட்டை அடம்பன் பகுதியில் உள்ள அவர்களுடைய வீட்டிற்கு மோட்டார் சைக்கிளில் பயணித்த போதே குறித்த விபத்து இடம் பெற்றுள்ளது.

உயிரிழந்த குறித்த இரு பெண்களினதும் சடலம் மன்னார் பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறித்த வாகனத்தின் சாரதி முருங்கன் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

மேலதிக விசாரணைகளை உயிலங்குளம் மற்றும் மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,285)

# யாழ்ப்பாணம் உட...

புத்தளம், கண்டி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் தற்போது அமுலில் இருக்கும் ஊரடங்கு சட்டம் மறு அறிவித்தல் வரை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஏனைய மாவட்டங்களில் 14ஆம் திகதி செவ்வாய்கிழமை காலை ஊரடங்கச் சட்டம் தற்காலிகமாக நீக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் அமுலில் உள்ள ஊரடங்குச் சட்டம் நேற்று வியாழக்கிழமை காலை 6.00 மணிக்கு தளர்த்தப்பட்டு மீண்டும் பிற்பகல் 04.00 மணிக்கு அமுல்படுத்தப்படுத்தப்பட்டது.

இம் மாவட்டங்களில் அமுல்படுத்தப்படும் ஊரடங்குச் சட்டம் எதிர்வரும் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 06.00 மணிக்கு நீக்கப்பட்டு அன்றைய தினம் மாலை 04.00 மணி முதல் மீண்டும் அமுல்படுத்தப்படவுள்ளது.

கொரோனா வைரஸ் பரவுவதை தடுப்பதற்காக பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டம் உள்ளிட்ட நடைமுறைகள் மக்களின் நலனுக்காகவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருப்பதனால் ஏற்படும் சிரமங்களை தெளிவுடனும் பொறுப்புடனும் பொறுத்துக் கொள்ளுமாறு அரசாங்கம் மக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள காலப்பகுதியில் மக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் வேறு பொருட்களை வீடுகளில் இருந்தே பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் தொடர்ச்சியாக வழங்கலை மேற்கொள்ள அரசாங்கம் அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

எந்த மாவட்டத்திலாயினும் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் சிறு தேயிலை தோட்டங்கள், ஏற்றுமதி பயிர்கள் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட மக்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கண்டி மற்றும் களுத்துறை மாவட்டங்களில் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்கள் தொடர்ந்தும் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாகவே கருதப்படும்.

எவரும் இந்த கிராமங்களுக்கு உள்வருவதோ அல்லது வெளியேறுவதோ மறு அறிவித்தல் வரை முழுமையாக தடைசெய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

# காப்பாற்ற யாரும்...

மதில் வீழ்ந்து, அதற்குள் அகப்பட்டு உயிரிழந்துள்ளார்.

ஒட்டுசுட்டான் பகுதியினை சேர்ந்த 23 வயதுடைய சௌந்தராஜன் சயந்தன் என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

குறித்த இளைஞன் நேற்று முன்தினம் இரவு மதில் மீது ஏறி பக்கத்து காணிக்குள் பாய முற்பட்ட போது மதில் இளைஞன் மீது விழுந்துள்ளது.

இதன்போது மதிலுக்குள் அகப்பட்ட இளைஞன் காயமடைந்த நிலையில் காப்பாற்ற யாரும் இல்லாத நிலையில் உயிரிழந்துள்ளார்.

நேற்றுக் காலை பால் கொள்வனவு நிலையத்திற்கு சென்ற பண்ணையாளர்கள் இளைஞனை காணாது தேடிய போது அவர் அருகில் வீழ்ந்து கிடந்த மதிலுக்குள் அகப்பட்டு உயிரிழந்த நிலையில் காணப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளின் பின்னர் சடலத்தினை மீட்டு மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

மருத்துவமனையின் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-3)

# பூநகரி இளைஞன்...

நேற்று உயிரிழந்துள்ளார்.

30 வயதுடைய ஆனந்தவர்ண்ணன், பூநகரியின் முன்னைநாள் கோட்டக்கல்வி பணிப்பாளர் தில்லைநாதனின் மகனாவார். (ம-3)

# வேறு மாவட்டங்...

களுக்கு அனுப்பி வைக்கப்படுவர் என பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இன்று வெள்ளிக்கிழமை முதல் இந்த நடைமுறை பின்பற்றப்படும் எனவும், அவ்வாறானவர்கள் 14 நாட்கள் கட்டாயம் தனிமைப்படுத்தப்படுவார்கள் எனவும் அஜித் ரோஹன குறிப்பிட்டுள்ளார். (ம-3)

# கொரோனா...

அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

வைரஸ் தொற்றியவர்களை அடையாளம் காண பரிசோதனைகளை அதிகரிக்குமாறு வழங்கப்பட்ட ஆலோசனையை கவனத்தில் கொள்ளாது சுகாதார அமைச்சு செயற்பட்டுள்ளதால், கொரோனா வைரஸ் நான்காம் கட்டத்திற்கு வந்து முழு சமூகத்திற்குள்ளும் பரவும் ஆபத்து இருப்பதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித்த அளுத்கே தெரிவித்துள்ளார்.

நாட்டில் முதலாவது கொரோனா நோயாளி அடையாளம் காணப்பட்டபோது, எதிர்காலத்தில் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்பதால், பரிசோதனைகளை அதிகரிக்க வேண்டும் என சுட்டிக்காட்டிய போதிலும் அதிகாரிகள் அது குறித்து அக்கறை காட்டவில்லை என்பதால், கொரோனா வைரஸ் பயங்கரமான வகையில் சமூகத்தை பாதிக்கும் ஆபத்து இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றியவர்களை அடையாளம் காண தினமும் ஆயிரத்து 500 பரிசோதனைகளை நடத்த வேண்டும்.

எனினும் தற்போது தினமும் சுமார் 300 பரிசோதனைகளே நடத்தப்பட்டு வருவதாகவும் அளுத்கே மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

# அடுத்த கட்டத்தில்...

இதுதொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பிவைத்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

கொரோனா வைரஸ் பரவுவதை தவிர்ப்பதற்கு அரசும் பாதுகாப்புத் துறையும் சுகாதார துறையும் மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலத்தில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

தற்போது வைரஸ் தொற்றுடையவர்களுடன் நெருங்கிப் பழகிய குழுக்கள் அதற்கப்பாலும் இரு கட்டங்கள் முன்னோக்கி தொடர்புகளை கொண்டிருந்தவர்களை இனம்கண்டு பரிசோதிக்க வேண்டியதன் அவசியத்தை மருத்துவ நிபுணர்கள் சுட்டிக்காட்டினர்.

வைரஸை இனம்காண்பதற்கு தேவையான பரிசோதனை கருவி தொகுதி போதுமானளவு இருந்த போதும் எந்தவொரு நிலைமைக்கும் முகம்கொடுக்கக்கூடிய வகையில் அவற்றை தருவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி, சுகாதார அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

உலகின் ஏனைய நாடுகளை பார்க்கிலும் வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்துவதற்கு ஜனாதிபதி முன்னெடுத்த நோய்த்தடுப்பு நிகழ்ச்சித் திட்டங்களை மருத்துவ நிபுணர்கள் பாராட்டினர். அந்த நோய்த்தடுப்பு நடவடிக்கைகளை தொடர்ந்தும் பலப்படுத்துவது வைரஸ் பரவுவதை தடுப்பதற்கு மிகவும் முக்கியமானதாகும் என்றும் மருத்துவ நிபுணர்கள் குறிப்பிட்டனர்.

வைரஸ் பரவாத பிரதேசங்களை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர்கள் வலியுறுத்தினர். அப்பிரதேசங்களுக்கு வைரஸ் பரவியுள்ள பிரதேசங்களில் இருந்து செல்வதை நிறுத்த வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

அனைவரும் முடியுமானளவு வீடுகளில் இருப்பது முதலாவது நடவடிக்கை என்ற வகையில் மிகவும் முக்கியமானது என மருத்துவ நிபுணர்கள் குறிப்பிட்டனர். வீட்டிலிருந்து வெளியேறும்போது முகக் கவசங்களை அணிதல், முகத்தை தொடுவதை தவிர்த்தல், ஒவ்வொரு வருக்கும் இடையே எப்போதும் ஒரு மீற்றர் தூரத்தை பேணுதல் மற்றும் கைகளை நன்றாக கழுவிக் கொள்ளுதல் என்பன ஐந்து முக்கிய பாதுகாப்பு நடைமுறைகளாகும்.

நிபுணர்கள், பல்கலைக்கழகங்கள், தொழிநுட்ப நிறுவனங்கள், தனிப்பட்ட குழுக்கள் கோவிட்-19 தொடர்பான பல்வேறு கண்டுபிடிப்புகளை மேற்கொண்டுள்ளனர். அக்கண்டுபிடிப்புகளை உடனடியாக துறைசார்ந்த மட்டத்தில் ஆராய்ச்சிக்கு உட்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

கொரோனா வைரஸ் விரைவாக தொற்றக்கூடியவர்கள் குறித்தும், அவர்களை அதிலிருந்து விடுவிப்பதற்கு பின்பற்றப்பட வேண்டிய முறைமைகள் என்னவென்றும் ஜனாதிபதி வினவினார்.

நீரிழிவு, சுவாசம் மற்றும் இருதயம் சம்பந்தமான நோய்கள் உள்ளவர்கள் மிகக் கவனமாக இருக்க வேண்டும் என்பதுடன், அவர்கள் உரிய மருந்துகளை உரிய முறையில் எடுக்க வேண்டும் என்றும் மருத்துவ நிபுணர்கள் குறிப்பிட்டனர். அதேபோன்று புகைப்பதை முற்றாக தவிர்க்க வேண்டும் என்றும் அவர்கள் சுட்டிக் காட்டினர்.

அனைவரும் எல்லா சந்தர்ப்பங்களிலும் தொண்டைப் பகுதியை ஈரலிப்பாக வைத்திருப்பதற்காக நீராகாரங்களை பருக வேண்டியதன் அவசியத்தையும் அவர்கள் குறிப்பிட்டனர். (ம-3)

# இன்றுடன்...

சட்டம் அமுல்படுத்தப்பட்டு இன்றுடன் 20 நாட்கள் ஆகின்றன.

வைரஸ் தொற்று காரணமாக கடந்த மார்ச் மாதம் 20ஆம் திகதி ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

கொரோனாவை முழுமையாகக் கட்டுப்படுத்தும்வரை ஊரடங்கு தொடர்ந்து அமுலில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)




வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.04.2020 இல் பதிவேற்றம் செய்யப்பட்டது.

## வேட்பாளர்கள்...

வேட்பாளரும் நேரடியாகத் தொடர்புபட முடியாது.

இவ்வாறு சகல மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகர்களுக்கும் (மாவட்டச் செயலாளர்கள்) தேர்தல் ஆணைக்குழு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

சுதந்திரமான நியாயமான வாக் கெடுப்பை நடத்துவதற்கு தங்களிடமிருந்து கிடைக்கும் ஒத்துழைப்பை மிக உயர்வாக மதிக்கின்றேன் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தால் இதுதொடர்பில் அனைத்து மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகர்களுக்கும் நேற்று வியாழக்கிழமை அறிவுறுத்தல் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதிலேயே இந்த விடயத்தை அவர் அறிவுறுத்தியுள்ளார்.

சமூக நலத்திட்டத்தின் கீழ் இனங்காணப்பட்டுள்ள பயனாளிகளுக்கு உதவித் திட்டங்களை வழங்கும் பொருட்டு அமைக்கப்பட்டுள்ள குழுக்களின் செயற்பாடுகள் அரசியல் வடிவம் பெற்றுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம், கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

## 190 ஆனது...

கிழமை மாலை அடையாளம் காணப்பட்டுள்ளார் என்று சுகாதார மேம்பாட்டுத் திணைக்களத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 190ஆக (ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப் பெண் உட்பட) அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட 5 பேர் முழுமையாகச் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர்.

நேற்றுவரை 49 பேர் முழுமையாகக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 7 பேர் உயிரிழந் துள்ளனர்.

134 பேர் வைத்தியசாலைகளில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நாடு முழுவதுமுள்ள 22 வைத்தியசாலைகளில் 242 பேர் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். (ம-3)

## ஐரோப்பிய ஒன்...

(450 கோடி ரூபாய்) வழங்கியுள்ளது.

அத்தியாவசிய சேவைகள் தொடர்பான ஜனாதிபதியின் விசேட செயலணியின் கூட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை பசில் ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவ நாடுகளின் தூதுவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போதே கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக இலங்கை மேற்கொண்டுவரும் முயற்சிகளுக்கு உதவும் வகையில் 22 மில்லியன் யூரோக்களை வழங்குவது குறித்து இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

மேலும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிலிருந்து இலங்கைக்கு வருகை தந்து, இங்கு தங்கியிருக்கும் சுற்றுலாப் பயணிகளை மீளவும் பாதுகாப்பாக அவர்களது நாடு களுக்கு அனுப்பிவைப்பதற்கு அனைத்துத் தரப்பினரதும் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் சுகாதார, பொருளாதாரத் துறைகள் சார்ந்து எதிர்காலத்தில் இணைந்து பணியாற்றுதல் என்பன தொடர்பாகவும் இதன் போது ஆராயப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த கலந்துரையாடலில் ஜேர்மனி, நெதர்லாந்து, பிரான்ஸ் மற்றும் இத்தாலி உள்ளிட்ட நாடுகளின் தூதுவர்கள் கலந்து கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

### உணவு இல்லையா? தொடர்பு கொள்ளுங்கள்

**021 222 2235**

(யாழ்ப்பாணம்)

நாட்டில் நிலவும் கொரோனா அச்சம் காரணமாக யாழ் மாவட்டத்தின் எப்பகுதியில் உள்ள எவருக்கும் ஊரடங்கு காரணமாக பாதிப்படைந்து இதுவரை உணவிற்கு ஏற்பாடு இன்றி எவராவது சிரமப்பட்டால் உடன் மாவட்டச் செயலகத்தின்

**021 222 2235**

என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளுமாறு மாவட்டச் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் அறிவித்துள்ளார். (ம-3,114)

# கொரோனா COVID - 19

## இலங்கையின் நாளாந்த நிலைமை அறிக்கை

| நோய்த் தொற்று சந்தேகத்தில் | தொற்றுக்கு உள்ளானவர்கள் | குணமடைந்தவர்கள் | மரணமடைந்தவர்கள் |
|---|---|---|---|
| 242 | 190 | 049 | 007 |

## உலகளாவிய ரீதியில் நாளாந்த நிலைமை ஒரே பார்வையில்...

| உலகளவில் தொற்றுக்குள்ளானவர்கள் | உலகளவில் குணமடைந்தவர்கள் | உலகளவில் மரணமடைந்தவர்கள் |
|---|---|---|
| 1,584,490 | 348,468 | 94,705 |

| நாடுகள், உலகம் | மொத்த பாதிப்பு | புதிய தொற்றாளர்கள் | மொத்த மரணம் | இன்றைய மரணம் |
|---|---|---|---|---|
| மொத்தம் | 1,584,490 | 66,530 | 94,705 | +6,250 |
| ஐ.அமெரிக்கா | 456,712 | 21,785 | 16,231 | +1,443 |
| இத்தாலி | 143,626 | 4,204 | 18,279 | +610 |
| ஸ்பெய்ன் | 152,446 | 4,226 | 15,238 | +446 |
| சீனா | 81,865 | 63 | 3,335 | +2 |
| ஜேர்மனி | 115,523 | 2,227 | 2,451 | +102 |
| பிரான்ஸ் | 117,749 | 4,799 | 12,210 | +1,341 |
| ஈரான் | 66,220 | 1,634 | 4,110 | +117 |
| ஐ.இராச்சியம் | 65,077 | 4,344 | 7,978 | +881 |
| இந்தியா | 6,725 | 809 | 226 | +48 |

இன்று அதிகாலை 12.40 நிலைவரப்படி

எதிர்காலத்தைப் பற்றி கவலைப்படாதவனுடைய நிகழ்கால வாழ்க்கை இனிக்காது.
– யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அடுப்பு ஏறாத உலை இல்லை எனும் வகை செய்வோம்

ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டு பெயரினை நீக்கிப் பிணம் என்று பெயரிட்டுச் சூரையங் காட்டிடை கொண்டு போய்ச் சுட்டிட்டு நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தாரே

என்று கூறிய பட்டினத்தடிகள்.

ஊரும் சதமல்ல உற்றார் சதமல்ல என்று பட்டியல்படுத்தி, இந்தத் தேசத்திலே யாரும் சதமல்ல நின்றாய் சதம் கச்சியேகம்பனே என்று நிறைவு செய்தார்.

ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டு என்று கூறிய பட்டினத்தடிகள் எதற்காக ஊரும் சதமல்ல உற்றார் சதமல்ல என்று கூறினார்.

ஒருவர் இறந்தபோது ஊர் கூடி அஞ்சலி செலுத்துவது பெறுமதியானதல்லவா?

அப்படியானால் பட்டினத்தடிகள் முன்னுக்குப் பின் முரணான தத்துவத்தை உபதேசிக்க முற்பட்டாரா என்று எண்ணியதுண்டு.

ஆனால் இப்போதுதான் தெரிகிறது கொரோனா நோயினால் உயிரிழந்து விட்டால்; ஊர் இல்லை, உறவுகள் இல்லை, பெற்ற பிள்ளைகளும் இல்லை, ஏன்? இறந்தவரின் முகத்தைக் கூடப் பார்க்க முடியாதவாறு மூடிய பெட்டியில் வைத்து மற்றவர் அறியா வண்ணம் அடக்கம் நடந்து விடுகிறது.

இங்குதான் பட்டினத்தடிகள் உபதேசித்த யாரும் சதமல்ல என்ற தத்துவம் உணரப்படுகிறது.

ஓ! இறைவா! மானிடர்களின் வாழ்வியல் முறையில் உனக்கு உடன்பாடு இல்லை என்பதை உணர முடிகிறது.

இருந்தும் மனிதர்கள் மீது இன்னமும் நீ அன்பாய் இருக்கிறாய் என்பதையும் நாம் மறந்து விடவில்லை.

மானிடர்கள் மீது நீ வெறுப்புக் கொண்டதற்கு காரணம் கனக்க உண்டு.

ஆனால் அவர்கள் மீது நீ இன்னமும் அன்பு வைத்திருப்பதற்கு என்ன காரணம்?

இதைத் தேடியபோதுதான் மற்றவர்களும் வாழ வேண்டும் என்று நினைக்கின்ற அன்புடையர் இன்னமும் இந்த வையகத்தில் வாழ்வதால் எம் மீது நீ கருணை காட்டுகிறாய் என்பதை உணர முடிகிறது.

அதோ! கொடிய கொரோனாவால் நாளாந்த வருமானம் இழந்து, ஒருவேளை உணவுக்கு என்ன செய்வது என்று ஏங்குகின்றவேளை, உணவுப் பொருட்களை வாங்கி அதைப் பொதி செய்து வீடு வீடாகக் கொண்டு சென்று வழங்குகின்ற அந்த உத்தமப் பணி கண்டு இறைவனால் இரங்காமல் இருக்க முடியவில்லை.

அதேநேரம் இன்னமும் எங்கள் வீட்டில் உலை அடுப்பேறவில்லை என்று மௌனமாய்க் கண்ணீர் விடுபவர்களும் நம்மத்தியில் மறைந்திருக்கக் கூடும்.

அவர்களையும் கண்டறிந்து எல்லோரும் பசியாற உதவுவோம்.

ஒரு தரப்பிற்கே எல்லா உதவியும் என்ற நிலையை மாற்றி, அவர்கள் அவர்களுக்கும் இவர்கள் இவர்களுக்குமாக பகுத்துக் கொடுத்து பல்லுயிர் காப்போம்.

இவ் உயரிய அறம் கண்டு அந்தப் பரம்பொருள் நிச்சயம் மனம் மகிழ்ந்து மானிடத்தைக் காப்பான்.

## யாழ்.பல்கலை.மருத்துவ பீடத்தில் இதுவரை 89 பேருக்கு பரிசோதனை யாருக்கும் கொரோனா தொற்றில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் ,துவரை 89 பேருக்கு கொரோனா தொற்று குறித்து ஆய்வுகூட பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதாகவும் அவ்வாறு பரிசோதிக்கப்பட்ட எவருக்கும் தொற்று இல்லை எனவும் யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட பீடாதிபதியும் மருத்துவ நிபுணருமான எஸ்.ரவிராஜ் தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், ஒருநாளில் 20 தொடக்கம் 24 பேரில் பரிசோதனைகளை ஒரு தடவையில் மேற்கொள்ள முடியும். அதற்கு மேலதிகமாக பரிசோதனை மேற்கொள்ள வேண்டுமானால் ஒரு நாளில் இரண்டு தடவைகள் பரிசோதனை செயற்பாட்டை ஏற்பாடு செய்வதன் மூலம் 45 பேருக்கு சோதனை நடவடிக்கை மேற்கொள்ள முடியும்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரால் பரிந்துரைக்கப்படும் நபர்களுக்கு குறித்த பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-101)

## வவுனியாவில் 2000 கிலோ அரிசி பதுக்கல் முறியடிப்பு

### பாவனையாளர் அதிகார சபை அதிகாரிகள் அதிரடி

(வவுனியா)

வவுனியா நெடுங்கேணிப் பகு தியில் அமைந்துள்ள வர்த்தக நிலையமொன்றில் நேற்றுக் காலை பாவனையாளர் அலுவல் கள் அதிகார சபை அதிகாரிகள் அதிரடியாகச் செயற்பட்டு பதுக்கி வைக்கப்பட்டிருந்த 2000 கிலோ அரிசியை பறிமுதல் செய்தனர்.

அரசாங்கத்தின் நிர்ணய விலையையும் விட கூடுதலான விலைக்கு அரிசியை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களைச் சோதனைக் குட்படுத்தும் நடவடிக்கையில் வவுனியா வடக்கு நெடுங்கேணி பகுதியில் வவுனியா மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் ஈடுபட்டிருந்தனர்.

இதன் போது நெடுங்கேணி பகுதியில் அமைந்துள்ள ஓர் வர்த்தக நிலையத்தினுள் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட சமயத்தில் 10 கிலோ அரிசி - 200 பைகள் உற்பத்தித் திகதி , காலாவதி திகதி , நிறுவனத்தின் பெயர் , விலை என்பன முற்றிலும் ,ல்லாமலும், ஒரு கிலோ மிளகாயத் தூள் 18 பொதிகள் உற்பத்தித் திகதி , காலாவதித் திகதி , நிறுவனத்தின் பெயர் , விலை என்பன முற்றிலும் இல்லாமலும் பதுக்கி வைக்கப்பட்ட நிலையில் மீட்டனர்.

இதன் போது குறித்த வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் சோதனையில் ஈடுபட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அதிகாரிகளை தரக்குறைவான வார்த்தைப் பிரயோகங்களால் பேசியதுடன் அங்கிருந்து தப்பித்துச் சென்றார்.

அதன் பின்னர் அதிகார சபையினர் நெடுங்கேணி பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கியதையடுத்து, பொலிஸாரின் உத்தரவின் பேரில் வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் அழைத்து வரப்பட்டதுடன் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினரால் வர்த்தக நிலைய உரிமையாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

10 கிலோ அரிசி 25 பைகள் (250KG) மற்றும் ஒரு கிலோ மிளகாய்த் தூள் 18 பைக்கட் (18KG) ஆகியவற்றை பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் நீதிமன்றத்தில் ஒப்படைப்பதற்காக எடுத்துச் சென்றதுடன் மிகுதி 10 கிலோ அரிசி 175 பைகளை மக்களுக்கு கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்யுமாறும் தெரிவித்தனர்.

கொரோனா வைரஸ் தொற்றையடுத்து அமுல்படுத்தப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் வவுனியா மாவட்டத்தில் நேற்று 10 மணித்தியாலங்கள் தளர்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-250)



## மன்னாரில் தாராபுரம் தவிர்ந்த ஏனைய கிராமங்களில் நேற்று ஊரடங்கு தளர்வு

(மன்னார்)

மன்னாரில் நேற்று வியாழக்கிழமை காலை ஊரடங்குச் சட்டம் தளர்த்திக் கொள்ளப்பட்ட போதும் தாராபுரம் கிராமம் முழுமையாக முடக்கப்பட்டது.

தாராபுரம் கிராமத்தில் இடம்பெற்ற மரணச் சடங்கு ஒன்றில் புத்தளத்திலிருந்து வருகை தந்து கலந்து கொண்ட நபர் ஒரு வருக்கு கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் புதன் கிழமை அதிகாலை முதல் தாராபுரம் கிராமம் முழுமையாக முடக்கப்பட்டது.

இதேவேளை ஏனைய கிராம மக்கள் நேற்று பொருட்களைக் கொள்வனவு செய்ய மன்னார் நகர்ப் பகுதிக்குள் அதிகம் வருகை தந்தனர்.

எனினும் மரக்கறி வகைகள் உட்பட அத்தியாவசியப் பொருட்களை ஒரு சிலர் நியாயமான விலைக்கு விற்பனை செய்த போதும் பலர் அதிகூடிய விலைக்கே பொருட்களை விற்பனை செய்தனர்.

மேலும் மன்னார் புதிய பேருந்து நிலையப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வியாபார நடவடிக்கைகளை மன்னார் நகர சபை மட்டுப்படுத்தியுள்ளதோடு, உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டு உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட மரக்கறி வகைகள், பழங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

மேலும் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். (இ-285)





## பட்டினியால் தவித்த நாய்களுக்கு உணவு வழங்கிய இளைஞர்கள்



(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் பிறப்பிக்கப்பட்ட தொடர் ஊரடங்குச் சட்டத்தால் அனைத்து உணவகங்களும் மூடப்பட்டுள்ளன. இதன் காரணமாக உணவகங்களில் கழிவாகும் உணவுகளை நம்பி வாழ்ந்த தெருநாய்களும் உணவில்லாமல் பட்டினியால் தவித்து வருகின்றன.



இதனை அறிந்த சங்கானை இந்து இளைஞர் மன்றத்தைச் சேர்ந்த இளைஞர்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ்.நகரப் பகுதி உள்ளிட்ட யாழின் பல்வேறு பகுதிகளுக்கும் நேரடியாகச் சென்று பட்டினியால் வாடிய நாய்களுக்கு சமைத்த உணவு வழங்கி அவற்றின் பசியைப் போக்கினர். (இ-18)

# தாயின் வயிற்றிலிருக்கும் போதே குழந்தைகளுக்கு கொரோனா தொற்று ஏற்படலாம் - சீன வைத்தியர்கள்

(பீஜிங்)

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக புதிதாக பிறக்கும் குழந்தைகள் பாதிக்கப்பட்டுவரும் நிலையில், கர்ப்பத்தில் இருக்கும் காலத்திலேயே குழந்தைகளுக்கு கொரோனா வைரஸ் தொற்றும் அபாயம் உள்ளதாக சீன வைத்தியர்கள் எச்சரித்தனர்.

இதன் காரணமாக கர்ப்பிணித் தாய்மார்கள் கொரோனா வைரஸிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வது மிக முக்கியமானது என வைத்தியர்கள் அறிவுறுத்தினர்.

பிறந்த சில நாட்களுக்குப் பிறகு கொரோனா தொற்று கண்டறியப்பட்ட நான்கு குழந்தைகளை ஆய்வு செய்ததையடுத்தே சீன வைத்தியர்கள் இத்தகவலை வெளியிட்டனர்.

இவ் நான்கு குழந்தைகளில் மூன்று குழந்தைகள் பிறந்த உடனேயே தனிமைப்படுத்தப்பட்டிருந்தன. ஏனெனில் அக்குழந்தைகளின் தாய்மாருக்கு குழந்தை பிறப்பதற்கு முன்பே கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

நான்காவது தாய்க்கும் குழந்தைக்கும் குழந்தை பிறந்து பதினைந்து நாட்களுக்குப் பிறகு கொரோனா தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதேவேளை ஒரு குழந்தைக்குப் பிறந்து 30 மணித்தியாலங்களின் பின் கொரோனா வைரஸ் தொற்று அறிகுறிகள் வெளிப்பட்டன.

இரண்டு குழந்தைகள் பிறந்து ஐந்து நாட்களில் கொரோனா தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதில் ஒரு குழந்தைக்கு கொரோனா அறிகுறிகள் எதுவும் தென படவில்லை.

இவ் நான்கு குழந்தைகளை ஆய்வுக்குட்படுத்திய ஆராய்ச்சியாளர்களால் தாயின் கர்ப்பபையில் இருக்கும்போதே தொப்புள் கொடி வழியாக குழந்தைகளுக்கு வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கும் என்பதை நிராகரிக்க முடியவில்லை இருப்பினும்,இதற்கு நேரடி ஆதாரங்கள் எதுவும் இது வரை அறியப்படவில்லை.



வைத்தியசாலையில் இருந்த காலத்திலும் குழந்தைகளுக்கு வைரஸ் தொற்று ஏற்படுவதற்கான சாத்தியம் இருந்தபோதும், குழந்தைகள் மற்றும் தாய்மார்களுக்கு சிறப்பு நோய்த்தொற்று கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதால் அதற்கான வாய்ப்புக்கள் குறைவாக இருப்பதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

எனினும் ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, கர்ப்பிணிப்பெண்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதில் இரட்டிப்பு கவனம் செலுத்த வேண்டும் என சீன வைத்தியர்கள் மேலும் தெரிவித்தனர். (இ)

## தனிமைப்படுத்தப்பட்டார் மஸ்தான்!

(வவுனியா)

முன்னாள் பிரதியமைச்சரும் வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ்தான் வவுனியாவிலுள்ள அவரது வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டார்.

நேற்றுமுன்தினம் காலை சுகாதாரப் பரிசோதகர்களால் அவர் தனிமைப்படுத்தப்பட்டார்.

மன்னார் தாராபுரம் பகுதியில் கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்ற மரணச் சடங்கில் கலந்து கொண்ட புத்தளம் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகினார்.

இதனையடுத்து தாராபுரம் கிராமம் சுகாதாரப் பரிசோதகர்களால் நேற்று முன்தினம் முற்றாக முடக்கப்பட்டது.

குறித்த மணச் சடங்கில் முன்னாள் பிரதியமைச்சர் காதர் மஸ்தான், அவரது சகோதரர் மற்றும் பாதுகாப்புப் பிரிவினர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்காரணமாகவே காதர்



மஸ்தான்,அவரது சகோதரர் மற்றும் பாதுகாப்புப் பிரிவினர் ஆகியோரை மஸ்தானின் வீட்டில் சுகாதாரத் தரப்பினர் தனிமைப்படுத்தினர். (இ-250)

## வவுனியாவில் ஊரடங்கு தளர்வு

(வவுனியா)

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்றையடுத்து அமுல்படுத்தப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் வவுனியாவில் நேற்று 10 மணித்தியாலங்கள் தளர்த்தப்பட்ட நிலையில் அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக வர்த்தக நிலையங்களுக்கு வருகை தந்த மக்களின் எண்ணிக்கை குறைந்த அளவில் காணப்பட்டது.

நாட்டில் கொரோனா தொற்று தீவிரம டைந்ததையடுத்து நாடு பூராகவும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

இந்நிலையில் வடமாகாணத்தில் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் ஊரடங்கு சட்டம் நேற்றுக் காலை 6 மணிக்குத் தளர்த்தப்பட்டு மாலை 4 மணிக்கு மீண்டும் அமுலுக்கு




வந்தது.

ஊரடங்கு தளர்த்தப்பட்டபோது அத்தியாவசிப் பொருட்கள், மருந்துப் பொருட்கள், மரக்கறிகள் என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்காகவும் வங்கிகளில் பணம் பெறுவதற்காகவும் மக்கள் நகருக்கு வருகை தந்ததுடன் வங்கிகள், வர்த்த நிலையங்களின் முன்னால் வரிசையில் நின்று தமது தேவைகளை நிறைவேற்றிக்கொண்டனர்.



அத்துடன் மரக்கறி வியாபாரத்திற்காக வவுனியா - மன்னார் வீதியில் காமினி மகா வித்தியாலய மைதானத்தினுள் நகரசபையினரால் இடம் ஒதுக்கி வழங்கப்பட்டு நகரப்பகுதியில் பொது மக்களின் நடமாட்டம் குறைக்கப்பட்டது.

மேலும் வவுனியா பஜார் வீதி, மீன் சந்தை, மரக்கறிச் சந்தை ஆகிய பகுதிகளுக்கு செல்லும் மக்களுக்காக வீதியூடாக வாகனங்கள் செல்வதற்கும் பொலிஸாரால் தடை விதிக்கப்பட்டு வீதிகள் மூடப்பட்டு மோட்டார் சைக்கிள், துவிச்சக்கரவண்டிகளுக்கு மாத்திரம் அனுமதியளிக்கப்ப ட்டது.

வவுனியா நகரில் வங்கிகள் , விவசாயம் சம்பந்தமான திணைக்களங்கள், பலசரக்கு விற்பனை நிலையங்கள், மரக்கறி விற்பனை நிலையங்கள், மருந்தகங்கள், எரிபொருள் நிரப்பு நிலையம் என்பன திறப்பட்டதுடன் ஏனைய வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-250)

## வீட்டுக்குள் கசிப்பு உற்பத்தி பொலிஸார் கைப்பற்றி அழிப்பு

(வவுனியா)

வவுனியா, சாந்தசோலைப் பகுதியிலுள்ள பூட்டப்பட்ட வீடு ஒன்றில் கசிப்பு உற்பத்தி மேற்கொள்ளப்பட்ட நிலையில் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டது.

நேற்றுக் காலை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா சாந்தசோலை பகுதியிலுள்ள வீடு ஒன்றின் உரிமையாளர் வெளிநாட்டில் உள்ளமையால் நீண்டகாலமாக பூட்டப்பட்டு காணப்பட்டது.

உரிமையாளரின் உறவினர் ஒருவர் அவ்வப்போது குறித்த வீட்டைத் துப்புரவு செய்து பராமரித்து வந்தார். இந்நிலையில் நேற்று க்காலை குறித்த வீட்டைப் பார்வையிட உரிமையாளரின் உறவினர் சென்ற போது வீட்டுக் கதவு உடைக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து வீட்டிற்குள் சென்று பார்த்த போது பெரல் ஒன்றில் 40 லீற்றர் கள், கசிப்பு காய்ச்சுவதற்காக அதற்குரிய பொருட்கள் கலக்கப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டு மூடப்பட்டிருந்தது.

இது தொடர்பில் வீட்டு வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற வவுனியா குற்றத் தடுப்பு பொலிஸார் மற்றும் மகாறம்பைக்குளம் பொலிஸார் குறித்த கசிப்பு உற்பத்திக்கான கள் பெரலினை மீட்டு அப்பகுதி இளைஞர்களின் உதவியுடன் அவற்றை அழித்ததுடன் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இருப்பினும் இது தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. (இ-250)



## யாழ்.பல்கலையில் கற்கும் வெளிமாவட்ட மாணவர்களை சொந்த இடம் அனுப்ப ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தொடர் ஊரடங்குச் சட்டம் காரணமாக தமது வீடுகளுக்குத் திரும்ப முடியாத நிலையிலிருந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கின்ற வெளிமாவட்டங்களைச் சேர்ந்த பல மாணவர்களை அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்க பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, தமது வீடுகளுக்குச் செல்ல முடியாத நிலையில் விடுதிகளில் மாணவர்கள் யாராவது தங்கியிருப்பின் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும், இது தொடர்பான விபரங்களை 0778385706, 0774836964, 0766549719, 0777240016, 0774023015 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தெரியப்படுத்துமாறும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. (இ-18)

# மீண்டும் ஒரேநாளில் 2 ஆயிரம் பேர் பலி

## அமெரிக்காவை ஆட்டிப்படைக்கும் கொரோனா

(நியூயோர்க்)

அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு நேற்று முன்தினமும் ஒரேநாளில் சுமார் இரண்டாயிரம் பேர் உயிரிழந்தனர்.

சீனாவில் தொடங்கி ஐரோப்பிய நாடுகளை நிலைகுலையச் செய்த கொரோனா தற்போது அமெரிக்காவை ஆட்டிப்படைத்து வருகிறது. குறிப்பாக அந்நாட்டில் நேற்று முன்தினம் மீண்டும் ஒரேநாளில் மட்டும் வைரஸ் தாக்குதலுக்கு சுமார் 2 ஆயிரம் பேர் பலியாகினர்.

இதேவேளை நேற்று முன் தினம் ஒரேநாளில் புதிதாக 28 ஆயிரத்து 11 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது இதனால் நேற்று முற்பகல் 10 மணி நிலவரப்படி அமெரிக்காவில் கொரோனா வைரஸ் பரவியவர் களின் எண்ணிக்கை 4 இலட்சத்து 28 ஆயிரத்து 346 ஆக அதிகரித்தது.

மேலும், வைரஸ் தாக்குதலுக்கு நேற்று முன்தினம் ஒரே நாளில் மட்டும் ஆயிரத்து 895 (சுமார் இரண்டாயிரம்) பேர் உயிரிழந்தனர். இதனால் அந்நாட்டில் கொரோனாவால் பலியானோர் எண்ணிக்கை 14 ஆயிரத்து 736 ஆக அதிகரித்தது.

கடந்த சில நாட்களாக அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு தினமும் உயிரிழப் போரின் எண்ணிக்கை சுமார் 2 ஆயிரம் என்ற எண்ணிக்கையில் உள்ளதால் அந்நாட்டு மக்கள் அச்சமடைந்துள்ளனர். (இ)



## அமெரிக்காவை அடுத்து

# பிரிட்டனை குறிவைக்கும் கொரோனா ஒரேநாளில் ஆயிரம் பேர் உயிரிழப்பு



(லண்டன்)

பிரிட்டனில் கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு நேற்று முன்தினம் ஒரேநாளில் சுமார் ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

சீனாவின் ஹூபேய் மாகாணம் வுஹான் நகரில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் கண்டுபிடிக்க ப்பட்ட கொரோனா வைரஸ் உலகின் 209 நாடுகளுக்குப் பரவியது.

இந்த வைரஸ் வேகமாகப் பரவி வருவதால் நாள்தோறும் பெரும் உயிரிழப்புக்களும் ஏற்பட்டு வருகின்றன.

தடுப்பு மருந்து கண்டுபிடிக்க விஞ்ஞானிகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வரும் நிலையில் வைரஸ் தாக்குதலின் வீரியம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தற்போது ஐரோப்பிய நாடுகளில் கோரத் தாண்டவமாடி வருகிறது. இத்தாலி, ஸ்பெயின் மற்றும் பிரான்ஸை தொடர்ந்து வைரஸ் தற்போது பிரிட்டனிலும் வேகமாகப் பரவி வருகிறது.

இந்நிலையில் அங்கு நேற்று முன்தினம் ஒரே நாளில் மட்டும் வைரஸ் தாக்குதலுக்கு சுமார் ஆயிரம் பேர் உயிரிழந்தனர். இதனால், அங்கு கொரோனாவுக்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 7 ஆயிரத்தைக் கடந்தது.

நேற்றுக்காலை 7 மணி நிலவரப்படி, அந்நாட்டில் 60 ஆயிரத்து 733 பேருக்கு வைரஸ் தொற்று உறுதியானது. மேலும் நேற்று முன்தினம் ஒரேநாளில் மட்டும் வைரஸ் தாக்குதலுக்கு 938 பேர் உயிரிழந்தனர்.

இதனால், இங்கிலாந்தில் கொரோனா தாக்குதலுக்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 7 ஆயிரத்து 97 ஆக அதிகரித்தது. (இ)

## புதிதாக 59 பேருக்கு கொரோனா பாதிப்பு!

### ரஷ்யா - சீனா எல்லை மூடப்பட்டது

(மொஸ்கோ)

ரஷ்யாவுக்கும் சீனாவுக்கும் இடையே விளாடிவோஸ்டோக் அருகேயுள்ள எல்லை வழியாக சீனாவுக்கு சென்றவர்களில் புதிதாக 59 பேருக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டதையடுத்து அந்த எல்லை மூடப்பட்டது.

இனிமேல்ரஷ்ய விமானங்களில் விளாடிவோஸ்டோக் பகுதிக்கு வந்திறங்கும் சீனர்கள், 14 நாட்கள் தனிமைப்படுத்தல் முகாம்களில் தங்கவைக்கப்படுவார்கள் என்றும், சிறப்பு பாஸ் பெற்றுள்ள சீனர்கள் மட்டுமே விளாடிவோஸ்டோக் பகுதியில் நடமாட முடியும் என்றும் சீனத் தூதரகம் அறிவித்துள்ளது. (இ)



# கொரோனா விவகாரத்தில் அரசியல் செய்யாதீர்கள்!

## ட்ரம்பிடம் உலக சுகாதார அமைப்பு வேண்டுகோள்

(ஜெனிவா)

கொரோனா வைரஸ் விவகாரத்தில் அரசியல் செய்ய வேண்டாம் என டொனால்ட் ட்ரம்பிடம் உலக சுகாதார அமைப்பின் தலைவர் வேண்டுகோள் விடுத்தார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், கொரோனா வைரஸ் விவகாரத்தில் சீனாவுக்கு ஆதரவாக உலக சுகாதார நிறுவனம் ஒருதலைப்பட்சமாக செயல்பட்டு வருகிறது. எனவே, உலக சுகாதார நிறுவனத்துக்கு வழங்கும் நிதியை நாங்கள் நிறுத்தப் போகின்றோம் எனக் கூறியிருந்தார்.

இந்நிலையில் உலக சுகாதார அமைப்பின் தலைவர், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், முன்வைத்த விமர்சனங்கள் மற்றும் குற்றச்சாட்டுக்களுக்கு நேரடியாகப் பதிலளித்தார்.

இது குறித்து உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் தெரிவிக்கையில்,

தயவுசெய்து இந்தக் கொரோனா வைரஸ் விவகாரத்தை அரசியலாக்க வேண்டாம். இது உலகளவில் உங்களிடம் வேறுபாடுகளை ஏற்படுத்துகிறது.




தயவுசெய்து கொரோனாவை அரசியல் மயமாக்குவதைத் தவிர்த்திடுங்கள்.இந்த ஆபத்தான வைரஸைத் தோற்கடிக்க உலக நாடுகளின் ஒற்றுமை மிக முக்கியமானதாக இருக்கும்.

நாங்கள் எங்களால் முடிந்த அனைத்தையும் செய்து வருகிறோம்.நாங்கள் இரவும் பகலும் உயிர்களைக் காப்பாற்றத் தொடர்ந்து பணிபுரிந்து வருகிறோம். நேரத்தை வீணாக்க விரும்பவில்லை.

கொரோனா வைரஸ் போன்ற ஒரு புதிய மற்றும் தீவிரமான நோயை எதிர்கொள்ளும்போது எமது அமைப்பு ஒரு நடவடிக்கைக்குப் பிறகு மதிப்பீடு செய்கிறது.

பலம் மற்றும் பலவீனங்களை அடையாளம் காண எங்கள் மதிப்பீட்டை நாங்கள் செய்கிறோம். உலக சுகாதார அமைப்பு தொற்று நோயிலிருந்து உயிரிழப்பு குறைப்புக்களைக் கற்றுக்கொள்ள விரும்புகிறது.

எனவே , இந்த விவகாரத்தில் அரசியல் செய்வதை உடன் நிறுத்த வேண்டும் என அவர் மேலும் வேண்டுகோள் விடுத்தார். (இ)

## ஊரடங்கு உத்தரவை மீறியதால் சுகாதார அமைச்சர் பதவியிறக்கம்

(வெலிங்டன்)

நியூசிலாந்தில் ஊரடங்கு உத்தரவை மீறி தனது குடும்பத்துடன் கடற்கரையில் காரில் உலா வந்த சுகாதாரத்துறை அமைச்சர் டேவிட் கிளார்க், இணைச் சுகாதாரத்துறை அமைச்சராக பதவியிறக்கம் செய்யப்பட்டார்.



நியூசிலாந்தில் கொரோனா வைரஸின் தாக்கம் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து கடந்த மாதம் 25 ஆம் திகதி அங்கு முழு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அத்தியாவசிய தேவைகளை தவிர வேறு எதற்காகவும் மக்கள் வீடுகளை விட்டு வெளியே வரத் தடை விதிக்கப்பட்டது.

இந்நிலையில் அந்த நாட்டின் சுகாதாரத்துறை அமைச்சர் டேவிட் கிளார்க், ஊரடங்கு உத்தரவை மீறி தனது குடும்பத்துடன் கடற்கரையில் காரில் உலா வந்தார்.

இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. மக்கள் டேவிட் கிளார்க்கை கடுமையாக விமர்சித்து சமூக வலைத்தளங்களில் பதிவுகளை வெளியிட்டனர்.

இதனையடுத்து தனது தவறை ஒப்புக்கொண்ட சுகாதாரத்துறை அமைச்சர் டேவிட் கிளார்க், அதற்காக வருத்தம் தெரிவித்ததோடு பிரதமர் ஜெசிந்தாவிடம் தனது இராஜினாமா கடிதத்தை வழங்கினார். ஆனால் அவரது இராஜினாமா கடிதத்தை பிரதமர் ஏற்கவில்லை. அதேவேளை அவர் இணைச் சுகாதாரத்துறை அமைச்சராகப் பதவியிறக்கம் செய்யப்பட்டார்.

இதுகுறித்து பிரதமர் ஜெசிந்தா தெரிவிக்கையில், "டேவிட் கிளார்க் செய்த குற்றத்துக்கு அவரை நானே பதவி நீக்கம் செய்திருப்பேன். ஆனால் கொரோனா வைரஸால் ஏற்பட்டுள்ள நெருக்கடியைச் சமாளிக்க அவரது பங்களிப்பு தேவை என்பதால் அவரைப் பதவியிறக்கம் செய்துள்ளேன்" எனக் கூறினார். (இ)

# உலகளவில் 15 இலட்சத்தைத் தாண்டியது கொரோனா பரவியவர்களின் எண்ணிக்கை!

(ஜெனிவா)

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் பரவியவர்களின் எண்ணிக்கை 15 இலட்சத்தைத் தாண்டியது.

சீனாவில் ஹூபேய் மாகாணம் வுஹான் நகரில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த வைரஸ் தற்



போது உலகின் 209 நாடுகளுக்குப் பரவி பெரும் மனிதப் பேரழிவை ஏற்படுத்தி வருகிறது.

இந்த வைரஸுக்கு தடுப்பு மருந்து கண்டுபிடிக்க விஞ்ஞானிகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றனர். ஆனாலும் கொரோனாவின் வீரியம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

இந்நிலையில் நேற்றுக்காலை 9 மணி நிலவரப்படி உலகம் முழுவதும் 15 இலட்சத்து 26 ஆயிரத்து 985 பேருக்குக் கொரோனா வைரஸ் பரவியது. நேற்று முன்தினம் ஒரே நாளில் மட்டும் புதிதாக 96 ஆயிரத்து 66 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது. (இ)

## உதவியை மறக்க முடியாது இந்தியாவுக்கு ட்ரம்ப் நன்றி



(வோஷிங்டன்)

மருந்துப்பொருள் ஏற்றுமதிக்கு விதித்த தடையை நீக்கிய இந்தியாவுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் இந்த உதவியை மறக்க முடியாது எனவும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்தார்.

உலகையே உலுக்கி வரும் கொரோனா வைரஸ் அமெரிக்காவில் தீவிரமடைந்துள்ளது. அந்நாட்டில் 4 இலட்சத்துக்கும் அதிகமானோருக்கு வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்டது. மேலும் கொரோனாவுக்கு அமெரிக்காவில் 14 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.

இதற்கிடையில் கொரோனா வைரஸ் சிகிச்சைக்கு உபயோகப்படுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்பட்ட ஹைட்ராக்ஸி குளோரோகுயின் மருந்துகள் உட்பட நாங்கள் கோரிக்கை விடுத்த சில மருந்துப் பொருட்களை வழங்க அனுமதிக்க வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடந்த ஞாயிற்றுக் கிழமை ( ஏப்ரல் - 5) பிரதமர் மோடியிடம் வேண்டுகோள் விடுத்தார்.

ஆனால் அந்தச் சமயத்தில் வெளிநாடுகளுக்கு மருந்துப் பொருட்களை ஏற்றுமதி செய்ய மத்திய அரசு தடைவிதித்தது.

இதனால் ஆத்திரமடைந்த ட்ரம்ப் கடந்த 7 ஆம் திகதி செய்தியாளர்களிடம் பேசியபோது, " அமெரிக்கா கோரிய மருந்துகளை அனுப்ப இந்தியப் பிரதமர் மோடி அனுமதி யளிக்கவில்லை என்றால் தக்க பதிலடி கொடுக்கப்படலாம்" என இந்தியாவுக்கு நேரடி எச்சரிக்கை விடும் வகையில் கூறினார்.

ட்ரம்ப் இவ்வாறு எச்சரிக்கை விடுத்த சில மணி நேரத்திலேயே இந்தியாவில் மலேரியாவுக்கு பயன்படுத்தப்படும் ஹைட்ரோகுளோரோகுயின் உட்பட 22 வகையான மருந்துப் பொருட்களை ஏற்றுமதி செய்ய விதிக்கப்பட்ட தடையை மத்திய அரசு நீக்கியது.

இதனால் அமெரிக்காவுக்கு ஹைட்ரோகுளோரோகுயின் மருந்துகள் கிடைப்பதில் இனி எந்தச் சிக்கலும் இல்லை.

இந்நிலையில், மருந்துப் பொருட்கள் ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்கிய இந்தியாவுக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நன்றி தெரிவித்தார்.

இது குறித்து அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் நேற்றுக் காலை வெளியிட்ட பதிவில்,

"அசாதாரண நேரங்களில் நண்பர்களுக்கு இடையே மிகவும் நெருக்கமான ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. ஹைட்ரோகுளோரோகுயின் மருந்துகள் விவகாரத்தில் உரிய நல்ல முடிவெடுத்த இந்தியாவுக்கும் இந்திய மக்களுக்கும் நன்றி. இந்த உதவியை மறக்க முடியாது.

கொரோனாவுக்கு எதிரான போராட்டத்தில் மிகவும் உறுதியான தலைமைப்பண்பு கொண்டு இந்தியாவுக்கு மட்டு மல்லாமல் மனித நேயத்திற்கே உதவி செய்துவரும் பிரதமர் நரேந்திர மோடிக்கு நன்றி" என டுவிட்டரில் ட்ரம்ப் பதிவிட்டார். (இ)

## கொரோனாவை விரட்ட கூட்டு வழிபாடு!

### தன்சானியா ஜனாதிபதியால் சர்ச்சை


(தோடோமா)

கொரோனா வைரஸை கட்டுப்படுத்த பல்வேறு நாடுகளில் சமூக விலகலை கடைப்பிடிக்கும்படி வலியுறுத்தி வரும் நிலையில், தன்சானியாவில் அதற்கு நேர்மாறாக கூட்டு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த சமூக இடைவெளியைப் பின்பற்ற வேண்டும் என்று உலக சுகாதார அமைப்பு வலியுறுத்தி வருகிறது. இதனால், பல்வேறு நாடுகளில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது. இதன்மூலம் சமூக தொற்று பெருமளவு கட்டுப்படுத்தப்படுவதால் இந்த ஊரடங்கை நீடிக்க வேண்டும் எனப் பலரும் வலியுறுத்தி வருகின்றனர்.

இவ்வாறு உலகமே ஊரடங்கு உத்தரவு என்ற பாதையில் செல்லும் நிலையில், தன்சானியா ஜனாதிபதி வித்தியாசமான பாதையைப் பின்பற்றுவதாகவும், நாட்டில் சமூக இடைவெளியைப் பின்பற்றுவதற்குப் பதிலாக வழிபாட்டுத் தலங்களில் கூடி கூட்டுப் பிரார்த்தனை செய்யும்படி வலியுறுத்தியிருப்பதாகவும் வால்ஸ்ட்ரீட் ஜோர்னலில் செய்தி வெளியானது.

கடவுளால் மட்டுமே இந்த வைரஸ் தாக்கத்தைத் தணிக்க முடியும் என ஜனாதிபதி கூறினார்.



கடந்த இரண்டு வாரங்களாக தன்சானியா ஜனாதிபதி ஜான் மகுபலி, தேவாலய சேவைகளில் பங்கேற்று, கொரோனா வைரஸ், விசுவாசிகளின் உடல்களில் உயிர்வாழ முடியாது என்று உற்சாகமாகப் பேசியுள்ளார். அவரது அறிவுறுத்தலைத் தொடர்ந்து, கடந்த சில தினங்களாக பல்வேறு கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் மசூதிகளில் அதிகளவிலான மக்கள் கூடிப் பிரார்த்தனையில் ஈடுபட்டுள்ளனர்.

தன்சானியாவில் மார்ச் 16 ஆம் திகதி கொரோனா வைரஸ் தொற்று முதன் முதலில் ஒருவருக்கு கண்டறியப்பட்டதையடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஒரு மாதத்திற்கு (ஏப்ரல் 30 வரை) அனைத்து பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டன. விளையாட்டுப்போட்டிகள் அனைத்தும் இரத்து செய்யப்பட்டன.

தன்சானியாவில் ,துவரை 25 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது. ஒருவர் பலியாகினார். 5 பேர் குணமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## பொரிஸ் உடல்நிலை சீராக உள்ளது பிரிட்டன் பிரதமர் அலுவலகம் தகவல்



(லண்டன்)

பொரிஸ் ஜோன்சன் உடல் நிலை சீராக உள்ளது. அவர் தொடர்ந்து தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ளார் என்று பிரிட்டன் பிரதமர் அலுவலகம் நேற்றுக்காலை தெரிவித்தது.

பிரிட்டன் பிரதமர் பொரிஸ் ஜோன்சனுக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டது. அவர் கடந்த 5 ஆம் திகதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். உடல்நிலை மோசமடைந்ததால், மறுநாள் தீவிர சிகிச்சைப் பிரிவிற்கு மாற்றப்பட்டார்.

இந்நிலையில் பொரிஸ் ஜோன்சன் உடல்நிலை சீராக இருப்பதாக அவரது அலுவலகம் தெரிவித்தது. "கொரோனா அறிகுறி மோசமடைந்ததால், தொடர்ந்து தீவிர சிகிச்சைப் பிரிவில் இருக்கிறார். ஆனால், அவர் நல்ல மனஉறுதியுடன் உள்ளார்" என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்தது.

இந்நிலையில் பிரதமர் பொறுப்பைக் கவனிக்கும் வெளியுறவு அமைச்சர் டொமினிக் ராப் தெரிவிக்கையில், பொரிஸ் ஜோன்சன் இயல்பாக சுவாசிக்கிறார். அவர் நோயை வென்று வருவார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அவர் ஒரு போராளி! விரைவில் குணம டைந்து மீண்டும் தலைமைப் பொறுப்பேற்று, இந்த சிக்கலான தருணத்தில் எங்களை வழிநடத்துவார் எனத் தெரிவித்தார். (இ)

# ஊரடங்கு தளர்வு: கிளிநொச்சி நகரில் குவிந்த மக்கள்






(கிளிநொச்சி)

ஊரடங்குச்சட்டம் நேற்றுக் காலை தளர்த்தப்பட்ட நிலையில் கிளிநொச்சி பொதுச்சந்தைகள், வங்கிகள்-நிதி நிறுவனங்களில் மக்கள் நடமாட்டம் அதிகளவில் காணப்பட்டது.

இலங்கையில் 19 மாவட்டங்களில் கடந்த ஆறாம் திகதி இரண்டு மணியிலிருந்து நடைமுறையிலிருந்த ஊடரங்குச் சட்டம் நேற்றுக் காலை 6 மணிக்கு நீக்கப்பட்டதையடுத்து, பல்வேறு தேவைகளுக் காக நகரை நாடி மக்கள் அதிகளவில் வந்தனர்.

குறிப்பாக, அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக அதிகளவான மக்கள் பொதுச்சந்தை மற்றும் சதொச விற்பனை நிலையம் மற்றும் நகர வர்த்தக நிலையங்களில் கூடினர்.

இதேவேளை தனியார் மருந்தகங்களில் மருந்துப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காகவும் மக்கள் கூடியிருந்தனர்.

அத்தியாவசியப்பொருட்களை கிராமப்புறங்களிலே கொள்வனவு செய்யக்கூடியதாக இருந்தாலும் அதிக விலைகளில் விற்கப்படுகின்றன. குறிப்பாக, அரிசி, சீனி, பருப்பு உருளைக் கிழங்கு, மற்றும் மரக்கறி வகைகள் அதிக விலைகளில் விற்பனை செய்யப்படுவதனால் அவற்றைக்கொள்வனவு செய்வதில் தாங்கள் பெருந் தொகைப் பணத்தை செலவிட வேண்டியிருப்பதாகவும் நகரை நாடி வந்த மக்கள் குறிப்பிட்டனர்.

படையினர் மற்றும் பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருந்ததுடன் மக்களும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-315)

## மின்சாரக் கட்டணங்களை ஏப்.30 வரை செலுத்தலாம்

### அமைச்சர் அமரவீர அறிவிப்பு

(கொழும்பு)

மின்சாரக் கட்டணம் மற்றும் நிலுவைகளை செலுத்துவதற்கு இம்மாதம் 30 ஆம் திகதிவரை கால அவகாசம் வழங்கப்பட்டது.

தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவு காரணமாக மின்சார பாவனையாளர்கள் தமது மின்சாரப்பட்டியலின் நிலுவைத் தொகையை செலுத்துவதற்கான சலுகைக் காலமாக இதனை அறிவிப்பதாக மின்சக்தி மற்றும் சக்திவலு அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

இதேவேளை எக்காரணம் கொண்டும் மின்துண்டிக்கப்பட மாட்டாது எனவும் அது தொடர்பில் மின்சார சபைக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.(இ)

## 24 மணித்தியாலங்களில் ஊரடங்கை மீறியதாக 1,724 பேர் கைது, 496 வாகனங்கள் பறிமுதல்



(கொழும்பு)

நேற்று முன்தினம் 8 ஆம் திகதி புதன்கிழமை காலை 6 மணி முதல் நேற்று வியாழக் கிழமை காலை 6 மணி வரையான 24 மணித்தியாலங்களில் ஊரடங்கு உத்தரவை மீறியதற்காக 1,724 பேர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை 496 வாகனங்களையும் பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

கடந்த மார்ச் 20 ஆம் திகதி முதல் ஊரடங்கு விதிமுறைகளை மீறியதற்காக 19 ஆயிரத்து 441 நபர்களை பொலிஸார் இதுவரை கைது செய்ததுடன் 5 ஆயிரத்து 82 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2009

### மதன்




### குணா




### புவிதா




### அகிலா




### தருன்




### அதுல்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.